இதைத் தொகுக்க உதவிசெய்த அருளகம் பணியாளர்கள் லிதியாள், மார்கிரேட், புஷ்பா, எஸ்தர், மணிக்கொடி, லதா, தமிழ் முத்து, கிரேஸ், அந்தோணி, முருகேசன் ஆகியோருக்கும் நன்றி. ஆங்கிலத்தை நெறிசெய்து, கணணியில் ஏற்ற உதவிய திருமதி. ராஸ்லீக் மற்றும் மார்கிரேட் ருக்மணிக்கும் நன்றி. இதைச் சிறப்பாக வெளிக்கொணர உற்சாகமூட்டிய முனைவர். மோகன் லார்பியர் மற்றும் எங்களின் பொருளாளார் முனைவர். ஆர்தர் ஜெயக்குமார் அவர்களுக்கும் நன்றி. அனைத்துக்கும் மேலாய், இப்படிப்பட்ட வெற்றிக்கதைகள் மூலம், நம்மை வாழ்வுக்கு நேராக வழிநடத்தும் கடவுளுக்கும் நன்றி.

மார்கிரேட் லார்பீர்

தனம்
1978

தனம் மதுரைக்கு அருகிலுள்ள இராஜபாளையத்தைச் சேர்ந்தவர். ஒருவரைக் காதலித்தார். இது தங்களுடைய வீட்டிற்குத் தெரியவர, வீட்டில் உள்ளவர்கள் தனத்தை அடித்துத் துன்புறுத்தினர். இதனால் மனமுடைந்த தனம் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். ஒரு நாள், தூக்குப் போட்டுக்கொள்ள முயற்சி செய்தார். இதைப் பார்த்த தாய், சத்தம்போட்டு அருகில் உள்ளவர்களைக் கத்தி அழைத்துக் கூப்பிட, தனம் காப்பாற்றப்பட்டாள். இதனால் சில நாள்கள் குடும்பத்தில் எந்தவித சண்டையும் இல்லாமல் அமைதியாக இருந்தனர். ஆனால், தனம் தன்னுடைய காதலை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இதைக் கவனித்த பெற்றோர் தனத்தைத் தொடர்ந்து திட்டிக்கொண்டேயிருந்தனர். 'நீ உயிரோடு இருந்து எங்களுடைய மானம் போவதற்கு அன்றைக்கே இறந்திருக்கலாம்' என்றனர். மீண்டும் தற்கொலை செய்துகொள்ள விரும்பாத தனம், தான் காதலித்தவனுடன் வீட்டைவிட்டு வெளியேறினாள். இருவரும் சென்னைக்கு ஓடிச்சென்றனர். அங்குச் சில நாள்கள் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்தினர். பிறகு தனத்தின் மீது அன்பு காட்டுவதில் சற்றுச் சறுக்கு ஏற்பட்டது. தனத்தை வைத்து பாலியல் தொழில் செய்யத் திட்டமிட்டான். தன்னைக் காதலித்து, தன்னையே நம்பி தன் பின்னால் வந்துவிட்ட தனத்தை நேசிக்காமல் புறக்கணித்தான். வறுமையைக் காரணம் காட்டி அவளைப் பாலியல் தொழிலுக்குட்படுத்தினான். பெங்களூர் சென்றால் இன்னும் நிறைய சம்பாதிக்கலாம் என்று சொல்லி, அங்கு அழைத்துச் சென்றான். பிறகு, பெங்களூரில் கெடுபிடி அதிகமாக இருந்ததால், மும்பை சிவப்பு விளக்குப் பகுதிக்கு அழைத்துச் சென்றான். அந்தப் பகுதியில் தண்ணீர் எடுத்து வைக்கும் வயதான பெண் ஒருவர், தனத்திடம் 'உன்னை வெளிநாட்டிற்கு விற்கப்போவதாகப் பேசிக்கொள்கிறார்கள். நீ இங்கிருந்து தப்பிவிடு' என்று சொல்ல அந்த அம்மாவிடமே கொஞ்சம் பணத்தையும் வாங்கிக்கொண்டு, அங்கிருந்து தப்பி, ரயிலில் மதுரைக்கு வந்து சேர்ந்தார். இங்கு இறங்கி, ஊர் செல்ல வழிகேட்டுக்

கொண்டிருக்கும்போது, சந்தேகத்தின் பேரில், போலீஸ்காரரால் கைது செய்யப்பட்டார். மதுரை சிறையிலிருக்கும்போது, அருளகப் பணியாளர்கள் தனத்தைச் சந்தித்தனர். 1978-ஆம் ஆண்டு இவர் அருளகம் வந்தார். அருளகத்தில் தங்கியிருக்கும்போது வீட்டு முகவரியைப் பெற்று பெற்றோரிடம் பேசி, அவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டது. ஓராண்டுக்குப்பிறகு பெற்றோர் மனம் மாறினர். தனத்தை அழைத்துச் செல்ல வந்தனர். இவளின் தாய்மாமன் தனத்தைத் திருமணம் செய்துகொள்ள முன் வந்தார். இருவருக்கும் திருமணம் நடந்தது. பிறகு கோரிப்பாளையத்தில் ஒரு ஓட்டல் நடத்தி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஒரு சில ஆண்டுகளுக்குப்பின் தங்களின் சொந்த ஊருக்கே திரும்பிச் சென்று நன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

2006-இல் குடும்ப வன்முறைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. குடும்ப வன்முறையும் மனிதஉரிமை மீறலே

— இந்து டைம்ஸ் 04.11.06.

சாரதா
1982

சாரதா தூத்துக்குடி அருகிலுள்ள சிறு கிராமத்தைச் சேர்ந்தவர். இவள் சிறுவயதாயிருக்கும் போதே பெற்றோர் இறந்துவிட்டனர். உடன் பிறந்தவர்கள் மூன்றுபேர். மூத்த அக்காள் வீட்டில் இவளும், இவளின் சகோதரனும் இளைய சகோதரியும் வளர்க்கப்பட்டனர். சகோதரன் வளர்ந்து வேலை தேடிச் சென்னைக்குச் சென்றுவிட்டான். சாரதா பூப்பெய்தியபின் படிப்பிற்குப் போவதும் நின்றுவிட்டது. சிறுமியாக வலம் வந்த சாரதாவை தாவணி போட்ட இளம் பெண்ணாகப் பார்த்த அக்காள் கணவனுக்குக் கெட்ட சிந்தனை தோன்றியது. ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாதபோது சாரதாவை பலவந்தமாய் பாலியல் பலாத்காரம் செய்தார். தன் அக்காளிடம் நடந்ததைச் சொல்லி அழுதிருக்கின்றாள். அவளின் அக்காளும், தன் கணவரிடம் சண்டை போட்டு திட்டியிருக்கின்றார். தனக்கு ஏற்பட்ட கொடுமையினால் சாரதா கருவுற்றாள். இதை அறிந்த இவளின், அக்காள் சாரதாவை மதுரையில் உள்ள மகளிர் இல்லம் ஒன்றில் கொண்டு வந்து அடைக்கலம் கேட்டிருக்கின்றார். சாரதாவை ஏற்றுக்கொண்ட இல்லத்தினர் அவருக்கு அடைக்கலம் கொடுத்து அவளுக்குப் பாதுகாப்பும் கொடுத்திருக்கின்றனர். பதினைந்து வயதில் திருமணமாகாமல் தாய்மை அடைந்த சாரதா, ஒரு அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். ஆனால் அந்த குழந்தையைத் தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே மதுரையிலுள்ள கிரேஸ் கென்னட் மருத்துவமனையிலுள்ள மழலை இல்லத்திற்குக் கொடுத்துவிட்டு திரும்பிவந்த சாரதாவிற்கு, இடமாற்றம் தேவைப்பட்டது. தனக்கு ஏற்பட்டக் கொடுமையிலிருந்து வெளிவர, வேலை செய்து, உழைத்து, சம்பாதிக்க, கவனம் மாற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதினால் அருளகத்திற்குக் கொண்டுவரப்பட்டாள். இங்கிருந்து, தையல், தறிபோடும் வேலைகளைக் கற்றுக்கொண்டாள். தன்னைப் போன்றே பாதிக்கப்பட்ட இளம் தாயாக நின்ற பல

பெண்களைச் சந்தித்தாள். அவர்களுக்கு ஆறுதல் கூறினாள். தான் இங்கிருப்பதை, தன் சகோதரனுக்கும் தெரியப்படுத்தி, தன் தங்கையை ஊரிலிருந்து வரவழைத்து, படிக்கவைக்க விரும்பினாள். சாரதாவின் சகோதரனும், அவளுக்கு மாதாமாதம் கொஞ்சம் பணம் அனுப்பி உதவி செய்தான். தன்னைப்போல் தன் சகோதரி பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, அவளை அழைத்து மதுரையிலுள்ள பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தாள். ஆறு ஆண்டுகள் அருளகத்தில் வாழ்ந்த சாரதாவிற்குக் குடும்பமாக, கணவன் மனைவியாக வாழும் வாய்ப்பும் கிடைத்தது. அவளின் அத்தை மகன், அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான். அருளகம் சகோதரிகள் பணியாளர்கள் சாரதாவிற்குச் செய்ய வேண்டிய அனைத்து முறைகளையும் செய்து, பரிசுகள், குடும்பம் நடத்தத் தேவையான பொருள்கள் போன்றவற்றையும் கொடுத்துத் திருமணம் செய்து வைத்தனர். இன்று சாரதா ஒரு குடும்பமாக வாழ்ந்து வருகின்றாள்.

இருபதாம் நூற்றாண்டின் தொழிநுட்ப வளர்ச்சியும், அதன் முன்னேற்றமும், மக்கள் மீதான பார்வையும், ஒருவரையொருவர் மதிப்பதிலும் ஒரு முன்னேற்றத்தைக் கொண்டுவந்துள்ளன என்றாலும் இனப் பாகுபாடு, நிற வேறுபாடு, வர்க்கம், முரண்பாடு, சுற்றுச்சூழல் காணல், பாலினப்பாகுபாடு இவை இன்னும் குறையிடல் இருக்கும் நிலைகண்டு வருந்துகிறோம்.

-பெண்கள் மீதான வன்முறையை மேற்கொள்ளுவதற்கான பத்தாண்டுகள்
-உலகத் திருச்சபை மாமன்றம்-2002.

சுந்தரி
1984

சுந்தரி, இவர் கோயமுத்தூரைச் சேர்ந்தவர் 1984-இல் திருமணம் செய்தவர். இவருடைய கணவருக்குக் குடிப்பழக்கம் இருப்பது, குடும்பத்தினரால் மறைக்கப்பட்டு சுந்தரிக்குத் திருமணம் செய்து வைத்தனர். படிப்பறிவு இல்லாத இந்தப் பெண்ணும் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார். தன் கணவருக்குக் குடிப்பழக்கம் மட்டுமின்றி, குண்டிக்காய் வீக்க நோயும் இருந்தது பிறகுதான் தெரியவந்தது. மனமுடைந்துபோன இவள், ஒருநாள், தன்தாயிடம் சொல்லி அழுதிருக்கிறாள். வருத்தப்பட்ட தாய் தன் மகளைத் தேற்றியிருக்கிறார். குடித்துவிட்டுத் தினமும் வந்து அடித்துத் துன்புறுத்தும் கணவனை விட்டு வீட்டுக்கு வந்து விடுகின்றேன் என்று சொல்லி அழுதிருக்கின்றாள். அதற்கு அவள் பெற்றோர், 'உனக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருக்கிறார்கள், அவர்களின் எதிர்கால வாழ்க்கையைச் சிந்தித்துப்பார்' என்றனர். திருமண வாழ்க்கையில் இதுமாதிரிப் பிரச்சனைகள் சகஜம்தான், எனவே நீ இதைச் சகித்துக்கொள் என, அறிவுரை கூறினார்கள். தன் தலைவிதியை நொந்து கொண்டாள். பிறகு ஓராண்டுவரை தன் கணவனின் தொல்லையைத் தாங்கிக் கொண்டு, கணவனுக்காகப் பணிந்து போயிருக்கின்றாள். ஆனால், இவளுடைய பொறுமையின் உச்சத்தைத் தாண்டும் அளவிற்குத் தினமும் அடியும் உதையும் அதிகமாகிக் கொண்டே போயிருக்கிறது. தன்னுடைய இயலாமை, குடிபோதை இவைகளினால், ஒவ்வொரு நாளும், சுந்தரியைத் துன்புறுத்தி, வேதனைப்படுத்தி, அவதூறான சொற்களினால் திட்டியிருக்கின்றார். இதைப் பொறுக்க முடியாமல் ஒரு நாள் வீட்டைவிட்டு வெளியேறினாள். மதுரைக்கு வந்து சேர்ந்தபோது, மாலை நேரமாகிவிட்டதால், செல்லுமிடம் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த இவரை, ஒருவர், அருளகத்திற்குப் பேருந்து ஏற்றி அனுப்பிவிட்டிருக்கின்றார். இல்லத்திற்கு வந்தபிறகு, ஓராண்டு காலம்

தங்கித் தம் கவலைகளைச் சொல்லி மனதைத் தேற்றிக் கொண்டார். இல்லத்தில் தங்கியிருந்த ஓராண்டு காலம் தையல் கற்றுக் கொண்டார். இதற்கிடையில், அருளகப் பணியாளர்களின் முயற்சியின் பேரில், மீண்டும் சுந்தரியின் கணவன் வீட்டிற்கும் பெற்றோர் வீட்டிற்கும் தகவல் அனுப்பி, வரவழைத்து, ஆலோசனைகள் வழங்கப்பட்டது. கணவருக்கு மருத்துவசிகிச்சை அளிக்கப்பட்டது. குடியை நிறுத்தினால் தான், மனைவி உங்களுடன் வந்து குடும்பம் நடத்துவாள் என்ற புத்திமதியும் வழங்கப்பட்டது. பிறகு சுந்தரி, தன் திருந்திய கணவனோடு இணைந்து, மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினார்.

"1974-1975-களில் இந்தியாவில் பெண்விடுதலை இயக்கங்கள் எழுச்சியடைந்த காலகட்டத்திலிருந்தே பெண்கள் மீதான வன்முறை என்பது ஒரு குறிப்பிட்ட பிரச்சனையாக எழுந்துள்ளது".

-ஜி. ஓம்வெட், 1990.

கமலா
1985

கமலா எனும் இவர் பெரியகுளத்தில் ஒரு மருத்துவ மனையில் நர்ஸ் தொழில் செய்து வந்தார். அந்த மருத்துவமனையில் வேலை பார்க்கும் ஒரு பெண் உதவியாளர், குளிர்பானத்தில் மயக்க மருந்தைக் கலந்து கமலாவுக்குக் கொடுத்திருக்கின்றார். தெரிந்தவர் உடன் பணியாளர் கொடுக்கிறார் என, குளிர்பானத்தை வாங்கிக் குடித்த கமலா மயக்கமாகி விழுந்திருக்கின்றாள். பிறகு, யாரோ ஒரு சில ஆண்கள் இவளைக் கடத்திச் சென்று, விடுதியில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்ததில், இரத்தப்போக்கு ஆகியிருக்கிறது. இதனால் விடுதியிலேயே போட்டுவிட்டு ஓடிவிட்டனர். மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்த கமலாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இவளைக் காணாமல் குடும்பத்தில் உள்ளவர்கள் நாளிதழில் விளம்பரம் கொடுத்துவிட்டனர். விடுதி அறையிலேயே அழுதுகொண்டிருந்த பெண்ணை விடுதி உரிமையாளர் வெளியே போகும்படி விரட்டியிருக்கின்றார். அதே விடுதியில் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு பெண் கமலாவின் நிலைகண்டு பரிதாபப்பட்டு, தன்னைப் போல் இன்னொன்று உருவாகிவிடக் கூடாது என்று சொல்லி விடுதி உரிமையாளரின் அனுமதியோடு தன்னோடு அழைத்துச் சென்றிருக்கின்றார். தான் இனிமேல் வாழத் தகுதியில்லாதவள் என்று, சாகத்துணிந்த கமலாவுக்கு ஆறுதல் கூறி, வாழ்க்கையை எதிர்கொள்ளத் தேற்றினார். இப்படிப்பட்ட பெண்களுக்கென ஒரு காப்பகம் இருப்பதை அறிந்த அந்தப் பெண் கமலாவை அருளகத்திற்கு வழிகாட்டியிருக்கின்றாள். தனக்கு ஏற்பட்ட நிலையைச் சொல்லி அழுததோடு இல்லாமல், மிகவும் பயந்த நிலையில் இருந்திருக்கின்றார். அருளகம் பணியாளர்கள் ஆறுதல்கூறி கமலாவைத் தேற்றியிருக்கின்றனர். நாளிதழில் விளம்பரத்தைக் கண்ட இல்லச்

சகோதரிகள் கமலாவின் குடும்பத்தாரோடு தொடர்பு கொண்டனர். தங்கள் மகள் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் குடும்பத்தினர் அருளகத்திற்கு வந்து கமலாவை அழைத்துச் சென்றனர். தன் வீட்டாரோடு இணைந்து கொண்ட கமலா இரண்டாண்டுகளுக்குப் பிறகு திருமணம் செய்து கொண்டு, உத்தமபாளையம் அருகே மகிழ்ச்சியாகப் பேரன் பேத்திகளோடு குடும்பம் நடத்தி வருகின்றார்.

"இந்தியா விடுதலையானபிறகு, பல்வேறு பெண்கள் இயக்கங்கள், சமூகத்தொண்டு நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பெண்கள் குழுக்கள், அரசுசாரா நிறுவனங்கள், மக்கள் இயக்கங்கள் இவைகளின் மூலம் ஓரளவுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது".

-பாலின சமத்துவம் சார்ந்த மறுகட்டுமானத்திற்காக முன்னுரை-1999.

மேரி
1990

மேரி என்னும் இவர் ஜூட்டுர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். மூணாறு பகுதியில் உள்ளவர். ஆனந்தன் என்பவரைக் காதலித்தாள். வீட்டில் இதற்கு ஒத்துக்கொள்ளாததால், அதிக நாள்கள், இருவரும் திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. இதற்கிடையில் ஆனந்தனின் கவனம் வேறொரு பெண்ணின் பக்கம் திசை திரும்பியது. தன்னைக் காதலித்தவன் ஏமாற்றிவிட்டான் என்பதைத் தாங்க முடியாமல் வீட்டில் முறையிட்டிருக்கின்றாள் மேரி. வீட்டாரும் அடி உதை கொடுத்து ஓர் அறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கின்றனர். அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த பூச்சி மருந்தைக் குடித்துவிட்டு, மயக்கநிலையிலிருந்த மேரியை பெற்றோர் காப்பாற்றினர். தன்னை ஏற்றுக்கொள்ளும்படி ஆனந்தனிடம் கேட்டிருக்கிறார். இனிமேலும் தன்னை வெறுத்தால் தூக்கில் தொங்கிவிடுவேன் என்றும் கூறியிருக்கிறார். இதனால் இருவரும் வீட்டைவிட்டு ஓடிவந்து மதுரையில் உள்ள ஒரு தங்கும் விடுதியில் தங்கியிருந்திருக்கின்றனர். இளம் வயதில் இருக்கும் இருவரையும், விடுதிக்குச் சொந்தக்காரர் மிரட்ட, மேரியை தனியாகவிட்டுவிட்டு ஓடிவிட்டான் ஆனந்தன். அந்த சமயம், விடுதியிலிருந்த வேறு சில ஆண்கள், இந்தப் பெண்ணை பலவந்தப்படுத்தி பாலியல் வன்முறை செய்து கொடுமைப்படுத்தியிருக்கின்றனர். இவ்வாறு பெண்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும், புரோக்கர்கள் விடுதிகளில் தனியாக சிக்கும் பெண்களை வைத்துத் தொழில் நடத்துவார்கள். அவர்கள் மேரியை பல ஆண்களுடன் கட்டாய உடல்உறவு வைத்துக் கொள்ளப் பலவந்தப்படுத்தியிருக்கின்றனர். ஓர் ஆண்டுக்குள் மேரிக்கு, பாலியல் நோய் தொற்றிக் கொண்டது. உடல்நலமில்லாமலும் போனது. இதனால், மேரியை கவனிக்காமல் விடுதியிலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். ஒரு நாள் போலீஸ் உளவுபார்க்க வரும்போது, இவரைப் பிடித்து

வந்து சிறையிலடைத்தனர். அந்தச் சமயம் அருளகம் பணியாளர்கள், சிறை சந்திப்பில் மேரியைச் சந்தித்து, 1990ஆம் ஆண்டு அருளகத்திற்கு அழைத்து வந்தனர். முதலில், இவருக்கிருந்த பாலியல் நோய்க்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. நல்ல சத்தான உணவும், ஆறுதலான பேச்சுக்களும், அன்பானவார்த்தைகளும், மேரியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாக்கின. மனிதஉறவுகள் மீது பிடிப்பும், வாழ்க்கையில் நம்பிக்கையும் உருவாகியின. தன்னை ஏற்றுக் கொண்டு, தன்னோடு வாழ்கை நடத்த விரும்பும் ஒருவரைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார். அப்படியே, மனைவியை இழந்த ஒருவர் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள முன்னுக்கு வந்தார். அருளகம் முன்னின்று இந்தத் திருமணத்தை நடத்தி வைத்தது. சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.

"பெண்கள் தனித்து வாழ வாய்ப்பு வழங்குவது கிடையாது. அப்படியே, திருமணம் ஆனாலும், குடும்பகௌரவம், எதிர் காலம் இவைகளைக் காப்பாற்றுவதற்காக, திருமண வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து சிரமங்களையும் சரிக்கட்டிச் செல்ல தொடர்ந்து அழுத்தப்படுகின்றனர்".

-நிர்மலா ஜெயராஜ், 2001.

மாரி
1992

மாரி மதுரையைச் சேர்ந்த பெண். திருமணமாகி இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயானார். கணவர் வேறொரு பெண்ணோடு இணைந்து வாழ்ந்ததினால் தனியாகக் கைவிடப்பட்டார். உறவினர்கள் யாரும் சேர்த்துக் கொள்ளவில்லை. தனக்கும், தன் குழந்தைகளுக்கும் உண்டான பசியைப் போக்க, வீட்டு வேலைப்பணியாளராக, ஒரு வீட்டிற்கு வேலைக்குச் சென்றார். அங்கே அந்த வீட்டின் குடும்பத்தலைவர் மாரியைத் தம் விருப்பத்திற்கு இணங்கக் கட்டாயப்படுத்தினார். உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்கிறேன். உன் பிள்ளைகளையும் மேலே படிக்க வைக்கின்றேன் என்று ஆசைவார்த்தைகளைப் பேசியிருக்கின்றார். இதை நம்பி அந்த வீட்டிலேயே வீட்டுவேலை பார்த்துக் கொண்டிருந்த மாரிக்கு வயது நாற்பத்தைந்து ஆனவுடன், இவள் மீதிருந்த அன்பு குறையத் தொடங்கியது. வீட்டு வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டார். தன்னுடைய மகன்களைப் படிக்கவைக்க முடியாமல், பணவசதியுமின்றி, மிகவும் கடினப்பட்டார். இதனால், மதுரையில் நகரப் பகுதியில் இருக்கும் ஒரு சில வீடுகளில் பகுதிநேரப் பணியாளராகப் பணியாற்றினார். குடிசைவாழ் பகுதியில் உள்ள சிறிய குடிசைவீட்டில் குடியிருந்துகொண்டு, நான்கு வீடுகளில் பகுதிநேர வீட்டுவேலைப் பணியாளராகப் பணி செய்தார். இதனால், நாளடைவில் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு, வேலை செய்ய முடியாத தருணத்தில், அருளகம் வந்து சேர்ந்தார். இந்த இல்லத்தில் தங்கியிருந்து தம்மை சற்றுக் குணப்படுத்திக் கொண்டார். தம்முடைய இரண்டு மகன்களையும், சிறுவர்கள் இல்லத்தில் சேர்த்துப் படிக்கவைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி மகன்கள் இருவரும் சிறுவர் இல்லத்தில் சேர்ந்து படிக்க வைக்கப்பட்டனர். ஐந்து ஆண்டுகள் அருளகத்தில் தங்கி, சமையல் செய்வதற்கு உதவியாக இருந்து வந்தார். இரண்டு மகன்களும்

பாலிடெக்னிக்கில் படித்தனர். இருவருக்கும் நல்ல வேலையும் கிடைத்தது. ஆஸ்துமா நோயினால் தொடர்ந்து மாரியினுடைய உடல்நிலை மோசமாகி இருந்ததால், தம்முடைய ஐம்பதாவது வயதில் இறந்துவிட்டார். ஆனால் இறப்பதற்கு முன்பு தாம் வாழ்ந்து வந்த வாழ்க்கையிலிருந்து ஒரு விடுதலை கிடைத்ததை எண்ணி அடிக்கடி கடவுளுக்கு நன்றி சொல்வார்.

'குடும்பவன்முறை என்பது, வர்க்கம், சாதி, சமயம் இவற்றைக் கடந்து அனைத்துப் பெண்களையும் பாதிக்கிறது. ஒருவேளை, ஒரு பெண் படித்தவரா, படிக்காதவரா, ஏழையா, வசதிபடைத்தவரா என்கிற பாகுபாட்டில் வேண்டுமானால் வேறுபாடு இருக்கலாம். படிக்காத பெண்களுக்குத் தங்களுடைய உரிமையைப் பற்றி விழிப்புணர்வு இல்லாமல் இருக்கலாம். அதனாலேயே, சட்டத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தெரியாமல் இருக்கலாம். ஆனால் படித்த மத்தியதர வர்க்கத்துப் பெண்கள் கூட ஏன் இத்தவறான செயல்களைப் பொறுத்துக் கொள்கிறார்கள்.'

- இந்துடைம்ஸ் 4.11.06.

ஜீவா
1994

ஜீவா மதுரைக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர். தகப்பன் ஒரு கூலித்தொழிலாளி. ஜீவா வளர்ந்து பூப்பெய்தியவுடன் மிகவும் அழகாக இருந்தாள். ஒருநாள் மாலை, குடித்து விட்டு வீட்டுக்கு வந்த தகப்பன் சாப்பாடு பரிமாற மகளைக் கூப்பிட்டிருக்கின்றார். உணவு போடும்போது மகளைக் கையைப்பிடித்து இழுத்து மடியில் உட்காரும்படி சொல்லியிருக்கின்றார். தன்னுடைய தகப்பனின் செயலில் வித்தியாசத்தையும், விரசத்தையும் கண்ட ஜீவா எழும்பி ஓட முயன்றிருக்கிறார். இருந்தாலும் அவளை இழுத்துக் கட்டிப்பிடித்து தொடையைக் கிள்ளியிருக்கின்றார். இதனால் ஜீவா கத்த அவளை விடுவித்துவிட்டார். வெளியே ஓடிவந்தவள் அழுது கொண்டேயிருந்திருக்கிறாள். பக்கத்து வீட்டிலிருந்து வந்த அம்மாவிடம் சொல்லியிருக்கின்றாள். குடிபோதையில் உன் அப்பா கோபத்தில் உன்னை அடித்திருப்பார் என்று சொல்லி அம்மா அவரைத் தேற்றியிருக்கிறார். பத்து நாள்களுக்குப் பின்பு, மறுபடியும், ஒருநாள் இரவு, தன்னுடைய அப்பாவின் தொல்லை ஆரம்பித்திருக்கின்றது. அன்றிரவு, ஜீவா தூங்கிக்கொண்டிருக்கும் போது, அவருடைய அப்பா அவள் மீது விழுந்து அவளை பாலியல் பலாத்காரம் செய்திருக்கின்றார். குடிவெறியில் கோரமாக தாக்கும் தன்னுடைய அப்பாவின் பிடியிலிருந்து திமிறி வரமுடியாமல் போராடி செயலிழந்திருக்கிறாள் ஜீவா. இதைத் தட்டிக் கேட்ட அம்மாவுக்கு, அடி உதை. இதுபோன்று அடிக்கடி தொந்தரவு தொடர்ந்திருக்கின்றது. ஒவ்வொருமுறையும் கேள்வி கேட்டு சண்டைபோடும் அம்மாவுக்கு, 'தென்னை வைத்தவன் இளநீர் குடிக்காமலா இருப்பான்'? என்று சொல்லி உதைத்திருக் கிறார். இதுதொடர, ஒருநாள் இரவு இதுபோன்று குடித்துவிட்டு வந்து, தொல்லை செய்யும்போது, ஜீவா, தன் அப்பாவைக் கீழே தள்ளி அருகிலிருந்த ஒரு கல்லை எடுத்து அவர் தலையில் போட்டார். துடித்துக்கொண்டிருந்தவரைப் பார்த்த அம்மா, தானும் ஒரு

கல்லை எடுத்து அவர் தலையில் போட்டார். அந்த இடத்திலேயே அவர் உயிர்விட்டார். இதனால் சிறைக்குக் கொண்டு வரப்பட்ட ஜீவாவையும் அவருடைய தாயாரையும், அருளகம் சகோதரிகள் சந்தித்தனர். தற்பாதுகாப்புக்காக, மகளையே பாலியல் பலாத்காரம் செய்த தகப்பனைக் கொன்றது முறையே என்று ஜீவாவையும் அவளுடைய அம்மாவையும் விடுதலை செய்தனர். 1994 முதல் 1998 வரை இந்த வழக்கு முடியும்வரை அருளகத்தில் தங்கியிருந்தாள் ஜீவா. அமைதியான வாழ்க்கை, சகவயது பெண்கள் காட்டிய அன்பு, நல்ல போதனைகள் இவற்றினால் உளவியல் சிக்கலிலிருந்து மீண்ட ஜீவா, மீண்டும், தான் வாழ்ந்த கிராமத்திற்கே சென்று, திருமணம் முடித்து, தற்போது நன்றாக இருக்கிறார்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் குடும்ப வன்முறைதான் பரவலான ஒன்றாகக் குடும்பங்களில் காணப்படுகின்றது.
-'திருச்சபைகளாக பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்புக்குரல் கொடுப்போம்'.

-எல்.டபிள்யு எப். 2003.

சாயிரா
2002

சாயிரா, சேலத்திற்கு அருகிலுள்ள அந்தியூரைச் சேர்ந்தவள். தாய் தகப்பன் இல்லாத பெண். கூலி வேலை பார்க்கும் விவசாயம் பார்க்கும் ஒரு குடும்பத்தில் சாயிரா எடுத்து வளர்க்கப்பட்டாள். இவள் வளர்ந்து வரும்போது 12 வயதில் இவளை மில்வேலைக்கு அனுப்பிவைக்கிறோம் என்று கூப்பிட்டக் கூலிப் பட்டாளம் ஒன்றிற்கு, இவள் விலை பேசப்பட்டாள். ஆனால் சிறுமியரைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் கும்பலில் சேர்த்துவிடப்பட்டாள். சிறுமியான சாயிராவுக்கு, இனிப்பில் மயக்க மருந்து கொடுத்து, மயக்க நிலையிலேயே, தொடர்ந்து அவளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியிருக்கின்றனர். ஒரு நாள், ஒரு வயதானவருக்கு விலைபேசப்பட்டிருக்கின்றாள். அவர், இவளின் உடல்நிலையைப் பார்த்து, நீ மிகவும் சிறிய பெண்ணாக இருக்கிறாய் உன்னைப்பார்த்தால் என் பேத்தி மாதிரி இருக்கிறது என்று சொல்லி, கையில் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து சென்னைக்கு இரயிலில் அனுப்பியிருக்கிறார். சென்னை இரயில் நிலையத்தில் வந்திறங்கிய சாயிராவை, ஓர் அரசாங்க மருத்துவர் சந்தித்திருக்கிறார். அவர், நான் உனக்குப் பாதுகாப்புத் தருகிறேன் என்று சொல்லி, அழைத்துக் கொண்டு போய், இன்னும் சில பெண்கள், சிறுமியர் தங்கியிருக்கும் இடத்தில் தங்கவைத்திருக்கிறார். அங்கே இவருக்குப் போதை ஊசியைப் போட்டு, பாலியல் தொழிலில், மீண்டுமாக ஈடுபடுத்தி யிருக்கின்றனர். இந்நிலையில் இதுமாதிரி சிறுவயது பெண்கள் கொடைக்கானலில் தேவைப்படுகின்றார்கள் என்று பேசிக்கொண்ட அவர்கள், சாயிராவை மதுரை வழியாக கொடைக்கானலுக்குக் கடத்தி வந்திருக்கின்றனர். மதுரையில், சிம்மக்கல் என்ற பகுதியில் வைத்து ஒரு மாதகாலம் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியிருக்கின்றனர். பிறகு கொடைக்கானலுக்குக் கொண்டு சென்று, அங்கே பாலியல் தொழில் நடத்திக் கொண்டிருந்திருக்கின்றனர். அந்த சமயத்தில், போலீஸ், உளவு செய்ய

வரும்போது, பிடிக்கப்பட்டு, மதுரை சிறுவர் சிறைக்குக் கொண்டு வரப்பட்டாள். தமிழ்நாடு இறையியல் கல்லூரி மாணவியர் சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் சாயிராவை சந்தித்தனர். அவர், விடுதலையாகி வெளியில் வருகையில், அழைத்துவந்து, அருளகத்தில் 2002-ஆம் ஆண்டில் சேர்த்தனர். படிப்பறிவு இல்லாமல், எந்நேரமும் ஊசி மருந்துகளினால், மயக்கநிலையிலேயே, பாலியல் துன்புறுத்தலுக்குள்ளான சாயிரா, கொஞ்சம் கொஞ்சமாக தெளிவைப் பெற்றாள். உடல் ஆரோக்கியமானது. நல்ல உணவு, தொடர் தியானம், கடவுள்பற்று இவற்றை வளர்த்துக்கொண்டாள். தையல் பயிற்சி பெற்று சிறப்பாகத் தைக்கவும் கற்றுக் கொண்டாள். அருளகத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்த நான்கு ஆண்டில், மதுரை காமராசர் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து எட்டாம் வகுப்புப் படித்தார். பிறகு பத்தாம் வகுப்புப் படித்தார். பிறகு திருமணமாகி, தற்போது திருநெல்வேலிக்கு அருகில் வசித்து வருகின்றார்.

குணமாக்கும் திருப்பணியைக் கட்டியெழுப்புவதின் மூலம், குமுகாயத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே சமாதானத்தைக் கொண்டுவர இயலும். இது வெறும் வாழ்க்கைப் பிரச்சனை மட்டுமல்ல, மாறாக ஒருவரின் பற்றுறுதி சார்ந்ததும் ஆகும்.

—'திருச்சபைகளாக பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்புக் குரல் கொடுப்போம்'. — எல்.டபிள்யு எப். 2003.

மோகனா
2003

மோகனா மதுரையிலுள்ள சர்வேயர் காலனி பகுதியில் வசித்தவர். அம்மா இறந்துவிட்டதால், அப்பா வளர்த்தார். குடும்பத்தில் மூத்த மகள் ஒரு தங்கை மட்டும் உண்டு. கூலித் தொழிலாளி ஒருவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர் குடிப்பழக்கத்தினால், மோகனாவை அடிப்பதோடு, சந்தேகிக்கவும் செய்தார். குடிகாரக் கணவனின் சந்தேகப் பேச்சுவார்த்தையைப் பொறுக்கமுடியாமல் அருகிலுள்ள பெந்தேகோஸ்தே திருச்சபைக்குச் சென்று நன்றாக செபித்தார். அங்குள்ள போதகர்களிடம் முறையிட்டார். செபிக்கச்சொல்லி கேட்டுக்கொண்டார். நாங்கள் செபிக்கின்றோம். ஆனால் உன் கணவனைத் திருத்தவேண்டிய பொறுப்பு உன்கையில்தான் இருக்கிறது. நீ அவருக்குப் புத்தி சொல். அவர் நல்ல புத்தியில் குடிக்காமல் இருக்கும் போது அவருக்கு அறிவுரை சொல்லு என்று சொல்லியிருக்கின்றனர். ஆனால் கணவனின் பிரச்சனை ஓயவில்லை. செபத்திற்கு சென்றுவந்தால் கூட எவனைப் பார்க்கப் போய் வருகிறாய்? என்று கேட்டு துன்புறுத்திய கணவனை விட்டு வெளியேறி, அடைக்கலம் தேடி 2003-ஆம் ஆண்டு அருளகம் வந்து சேர்ந்தார். இரண்டு வயதுடைய மகள், நான்கு வயதுடைய மகன் இருவரையும் அருளகத்திலுள்ள பாலர் பள்ளியில் சேர்த்து விட்டு, தாம் தைக்கக் கற்றுக் கொண்டார். இவர்கள் பற்றிய விபரம் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது. கணவனின், தாய் வந்து மோகனாவை அழைத்தார். நீ வந்து என் மகனுடன் வாழ்ந்தால் அவன் திருந்திவிடுவான் என்று அழைத்தார். எனவே அருளகத்திலுள்ள பணியாளர்கள் குடும்பத்தாருக்கும் ஆற்றுப்பணியாற்றி, மோகனாவின் விருப்பத்தின் பேரில் அவளைத் தன் கணவன் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். பத்து நாள் சென்றபின், மீண்டும் அருளகத்திற்கே வந்து நின்றாள் மோகனா. காரணம் கேட்டபோது, தம் கணவன் ஒருநாளும் வீட்டிற்கு வந்து தங்கவில்லை என்றும், குடித்துவிட்டு தெருவில் நிற்பதும்

Health Library and Information
CPHE - SOCHARA
Koramangala
Bangalore
(CLIC)
13764

கத்திவிட்டு போய்விடுவதுமாய் இருந்தார். நானும் என் பிள்ளைகளும் எவ்வளவுநாள் பட்டினிகிடப்பது என்று வந்துவிட்டேன் என்றும் கூறினார். ஆனால் தாம் வாழ விரும்புவதாய் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட விரும்புவதாய் தெரியப்படுத்தினார். இதனால் நிலக்கோட்டைக்கு அருகில் உள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றிற்குப் பணி செய்ய அனுப்பப்பட்டார். அங்குத் தாய் தகப்பன் இல்லாமல் அனாதைகளாக விடப்பட்ட பல குழந்கைள் தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு ஓர் அன்பான தாயாக, பராமரிக்கின்ற அன்னையாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். தம் பிள்ளைகளும் மற்ற குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்ற திருப்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

"அன்றாடம் வன்முறையைச் சந்திக்கும் பெண்களின் வீடுகளில், அந்த வன்முறையைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்". 'திருச்சபைகளாக பெண்களுக் கெதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்புக் குரல் கொடுப்போம்'.

-எல்.டபிள்யு எப். 2003.

கோகிலா
2004

கோகிலா, வத்தலக்குண்டு பகுதியில் வசித்து வந்தார். வரதட்சணைக் கொடுமையினால், தொந்தரவு தாங்க முடியாமல் தீ வைத்துக்கொண்டார் எனக் குற்றம் சுமத்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதற்காக போலீசார் விசாரணை நடத்தினார்கள். தன் மீது பழி சுமத்தினால் கோகிலாவை விலக்கி வைத்து விடுவதாக அச்சுறுத்திய அவளின் கணவன், கோகிலா தற்கொலை முயற்சிசெய்து கொண்டதாக ஒப்புக்கொண்டால், தான் இணைந்து வாழ்வதாகவும் பொய்யாக சத்தியம் செய்தான். இதை நம்பிய கோகிலா தன் மீதே பழியை ஏற்றுக் கொண்டாள். இனிமேல் இப்படி முயற்சி செய்தால், தண்டிக்கப்படுவீர்கள் என்று காவல் நிலையத்தில் எச்சரித்திருக்கிறார்கள். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றவுடன் கோகிலாவால், மன உளைச்சலிலிருந்து வெளிவர முடியவில்லை. தனக்கு ஏற்பட்ட வன்முறை பீதி அவளிடமிருந்து விலகவில்லை. போலீசில் கோகிலா, தன்னைக் காட்டிக்கொடுக்கவில்லை என்று உறுதியானவுடன், கணவன் மீண்டும் தொல்லை கொடுத்தான். தீக்காயத்தினால் கோகிலாவின் உடலில் ஏற்பட்ட காயங்களையும், தழும்புகளையும் குறையாகச் சொல்லி, மேலும் உளரீதியாக அவளைத் துன்புறுத்தினான். தொடைப்பகுதியில் அதிகமாகக் காயம்பட்டிருந்த கோகிலாவிற்கு இரண்டு கால்களையும் சரியாக விரித்து நடக்க முடியாமல், இருந்தது. இதனால் மனம் உடைந்தவள் வீட்டைவிட்டு வெளியேறினாள். 1999-இல் அருளகத்தில் அடைக்கலமானாள். இங்குத் தங்கியிருந்த நாள்களில், அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். மருத்துவர்கள் அறுவைசிகிச்சை செய்து, கால்களைச் சரிசெய்யலாம் என நம்பிக்கை

அளித்தனர். இதனால் அறுவைசிகிச்சை செய்து கொண்ட கோகிலா தையல் கற்று, சுயதொழில் செய்யும் நம்பிக்கையையும் பெற்றுக் கொண்டார். அருளகப் பணியாளர்கள் ஆற்றுப்படுத்தும் பணியின் மூலம் குடும்பத்தினருக்கும், கணவருக்கும், அவர்களின் தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டன. இரண்டாண்டுகள் முயற்சிக்குப்பின் மீண்டும் குடும்பத்தாருடன் இணைந்தார். கோகிலா தற்சமயம் வத்தலக்குண்டு சமீபம் வசித்து வருகின்றார்.

"பெண்கள் மீதான வன்முறையைக் குறித்த, தற்போதுள்ள ஆய்வுகள், பிரச்சனையைப் புரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் கருத்தியல் ரீதியாக ஒரு கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வதற்கும், உதவுவதுடன். வன்முறை அதிர்ச்சி, இவற்றிலிருந்து மீள்வதற்கான சமூக கலாச்சார உறவுப் பரிமாணங்களை அலசுவதற்கும் உதவிசெய்கின்றன"

-ராம் ஆகுஜா, 1998.

“

The real life stories of these sisters (women) create a significant impac
on those who are socially conscious. These stories shake our feelings an
make us reflect upon the world in which we live. They make us ashamed o
our society which does not respect women, and motivate us to work fo
societal change.

”